முருகப்பெருமான் துணை

**மகான் மச்சமுனிவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.05.2022**, சனிக்கிழமை

1. யோகராசனே தரும ஞானியே
உயிர்கொலை நீக்கி காத்திட
யாக வேள்விபோல சன்மார்க்க
உயர் சோதி வழிகாட்டும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடைதிங்கள்
வரங்களாக முன்னான்கீர் திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 14 ம் நாள், 28.05.2022 சனிக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே மச்சமுனிவர் யானும்
தவராஜன் கேட்க உரைப்பேன்
மண்ணுலகம் பேரிடரை வெல்ல
மண்ணும் குளிர்ந்து மக்களை காக்க
4. காக்க மனிதனிடை தருமசிந்தை
கட்டாயமாக்கப்பட வேண்டும்
தேக்கமின்றி ஜீவ தயவை
தெய்வ பலமாக ஏற்க வேண்டும்
5. வேண்டியே அரங்கன் காட்டும்
வினை வெல்லும் வழிதனை
தொண்டாக அறமாக ஏற்று
தொடர்ந்து வர மாற்ற முண்டு
6. உண்டான சைவ நெறியே
உலகை சமாதான வழிக்கு
கொண்டுசெல்லும் ஞான நெறி
குவலயம் எங்கிலும் பரவ
7. பரவவே போர் யுத்தங்களும்
பக்குவமிலா செயல்கள் யாவும்
தரணியை விட்டு விலகி
தனிப்பாதுகாப்புக் கூடும்
8. கூடவே அரங்க ஞானி வந்த
குறைவிலா நோக்கம் தானும்
நடக்க நடக்க மாற்றமாக
ஞான ஆட்சிக் காலமதும்
9. காலமதும் கனிய நேரும்
கட்டமான நிலைகள் விலகி
கோலமதாய் மாற்றம் தானும்
குருவரங்கன் சேவையால் நடக்கும்

10. நடக்கவே பிரணவக் குடிலெனும்
ஞான சபை நோக்கி வர
இடர் விலகும் தடைகள் இன்றி
எல்லா வளமும் காண்கும்

11. காண்கவே தவசி அரங்கன்
கருணை பெற்று வர
சண்முகனார் ஆசியில் கலியில்
சகலரும் ஞானிகள் ஆவர்
அருளாசி முற்றே

—சுபம்—